**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1**

**நீதிமன்றம், கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு. R. அருண்பாண்டியன், B.A.,B.L.,(Hons), M.L.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

**2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**E.A.1/2025**

**in**

**E.P.No.13/2005**

**in**

**O.S.No.15/2000**

1. T. குணசீலன் (died)
2. அருள்மேரி (died)
3. G.ஜெயசீலன்
4. ரூத்பிரியா என்கிற பாப்பு
5. G.பாபு
6. G.குட்டி .... மனுதாரர்கள்

/ எதிர்/

P.கோபால் மேற்படியாரின் பவர் ஆப் அட்டர்னி
K.ஜெயராமன் ... எதிர்மனுதாரர்

இந்த மனு என் முன் கடந்த 11.11.2025 தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.R.தங்கமணி அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது சி.பி.சி. விதி 21 கட்டளை106 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:–

E.P.No.13/2005 வழக்கில் எதிர்மனுஉரை தாக்கல் செய்யவதற்காக கடந்த 04.08.2023ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் அன்றை தினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்மனுஉரை தாக்கல் செய்யவில்லை என்றும் எனவே அன்றை தேதியில் ஒருதலைப்பட்சப்படுத்ததப்பட்டதாகவும், மேற்படி எதிர்மனுஉரை தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், மேற்படி E.P.No.13/2005 வழக்கில் தங்கள் தரப்பில் எதிர்வாதம் உள்ளதாகவும், எனவே மேற்படி வழக்கில் ஏற்பட்டுள்ள ஒரு தலைப்பட்ச தீர்ப்பினால் தனக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் எனவே கடந்த 04.08.2023-ம் தேதியன்று ஏற்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் எனவும், இம்மனுவுடன் E.P.No.13/2005 வழக்கில் தாக்கல் செய்யவேண்டிய எதிர்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் எனவே இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மேலும், மனுதாரர் தனது மனுவில் உடல்நிலை சரியில்லை என்று கூறி உள்ளார். ஆனால் எந்த வகையில் உடல்நிலையில் பாதிப்பு ஏற்பட்டு என்றோ அதற்கான மருத்துவ சான்றிதழோ தாக்கல் செய்யவில்லை என்றும், இந்நிலையில் இம்மனுவின் 4–மனுதாரருக்கு மட்டுமே உடல்நிலை சரியில்லை என்று கூறியுள்ளார். ஆனால் E.P.No.13/2005 வழக்கில் உள்ள இம்மனுவில் உள்ள மற்ற மனுதாரர்கள் ஏன் எதிரூரை தாக்கல் செய்யவில்லை என்ற காரணத்தை இம்மனுவில் சொல்லவில்லை என்றும், இம்மனு தாக்கல் செய்வதற்கான காலவரையறைச்சட்டம் 5ன் கீழ் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், E.P.No.13/2005 வழக்கின் நடவடிக்கைகளை காலதாமதம் செய்தவற்காகவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும், E.P.No.13/2005 வழக்கை விரைந்து முடிக்க கோரி இம்மனுவின் எதிர்மனுதாரர் தரப்பில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் உத்தரவு

பெற்றுள்ளதாகவும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5. தீர்வு:–**

5.1. E.P.No.13/2005 வழக்கானது அசல் வழக்கு எண்.15/2000 தீர்ப்பாணையில் கண்ட B ஷெடியூலில் இம்மனுவின் 1–ம் மனுதாரர் அமைத்த டெம்பரவரி செட் மற்றும் கோப்புகளை இந்நீதிமன்ற அமீன் மூலம் அப்புறப்படுத்த கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2. இந்நிலையில் மேற்படி மனுவில் எதிரூரை தாக்கல் செய்வதற்காக வழக்கு வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் 4–ம் மனுதாரர் 04.08.2023ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் அன்றை தினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்மனுஉரை தாக்கல் செய்யவில்லை என்றும் E.P.No.13/2005 வழக்கில் தாக்கல் செய்யப்படவேண்டிய எதிர்உரைமனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டது அல்ல என்றும் எனவே இம்மனுவின் மனுதாரருக்கு எதிராக 04.08.2023-ம் தேதி ஏற்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை இரத்துசெய்து இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

5.3. இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பிலோ, E.P.No.13/2005 வழக்கை காலதாமதம் செய்வதற்காகவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததற்கான சான்றிதழ்களையோ, எந்தவகையில் உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தையோ தெளிவுப்படுத்தவில்லை என்றும், இம்மனுவில் 4-ம் மனுதாரருக்கு தான் உடல்நிலைசரியில்லாமல் போனதாகவும் மனுதாரரே கூறியுள்ள

நிலையில், மற்ற மனுதாரர்கள் ஏன் எதிர்மனுஉரை தாக்கல் செய்யவில்லை என்ற காரணம் குறிப்பிடவில்லை என்றும், மனுதாரர் காலவரை சட்டம் பிரிவு 5-ன் கீழ் மனு எதுவும் தாக்கல் செய்யாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

5.4 இந்நிலையில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் Damodaran Pillai & Others vs South Indian Bank Ltd (2005) 4 MLJ 163 (SC) என்ற வழக்கில் E.P வழக்குகளில் தனியாக Section 5 மனுக்களை தாக்கல் செய்வது பொருந்தாது என்று, கூறியுள்ளது. . மேலும், இம்மனுவில் மனுதாரர் கூறியுள்ள காரணமானது முழுமையாக இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளகூடிய அளவில் இல்லை. இருப்பினும், எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனு விரைந்து முடிக்க கோரி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றுள்ளதாக கூறியுள்ள நிலையிலும், E.P.No.13/2005 வழக்கின் பயனாது உரிய தரப்பினர்களுக்கு சென்றடைவதற்கும், நீதியின் முறையில் தீர்வு காண்பதற்கும், E.P.No.13/2005 வழக்கில் இம்மனுவின் மனுதாரருக்கு எதிர்மனுஉரைதாக்கல் செய்ய ஒரு வாய்ப்பானது வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

5.5 மேலும், இம்மனுவில் மனுதாரர் தரப்பில் E.P.No.13/2005 வழக்கில் எதிர்மனுஉரையும் இத்துடன் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார். ஆனால் மேற்படி எதிர்மனுஉரை எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பெறவில்லை. இந்நிலையில் இம்மனுவின் மனுதாரர் E.P.No.13/2005 வழக்கை காலம் கடத்துவதற்காகவே பல்வேறு மனுக்களை தாக்கல் செய்துவருவதாக எதிர்மனுதாரர் தரப்பில் குற்றச்சாட்டை முன்வைத்துள்ள நிலையிலும், E.P.No.13/2005 முதல் கடந்த 20 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள காரணத்தினாலும், இம்மனுவை தகுந்த நிபந்தனையின் பேரில் அனுமதிப்பதே ஏற்படையதாக இருக்கும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக கீழ்கண்ட நிபந்தைகளின் பேரில் இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

1. மனுதாரர்கள் E.P.No.13/2005 வழக்கில் 17.12.2025-ம் தேதிக்குள் எதிர்மனுஉரையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. மனுதாரர்கள் இம்மனுவின் எதிர்மனுதாரருக்கு ரூ.20000/-ஐ 17.12.2025 ம் தேதிக்குள் செலுத்தவேண்டுமென்றும், அதற்கான மெமோவையும் இந்நீதிமன்றத்தில் மேற்படி தேதிக்குள் தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

3. மேற்படி இரண்டு உத்தரவுகளையும் மனுதாரர் பின்பற்றவில்லை எனில் இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படுவதாக கருதப்படும் எனவும் உத்தரவிடப்பட்டு, மேற்காண் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது. வழக்கின் விசாரணை 17.12.2025 தேதி ஒத்தி வைக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 05.12.2025 என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.12.05 17:20:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.
கொடைக்கானல்.

1. மனுதாரர்கள் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

2. எதிர்மனுதாரர்கள் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

3. நீதிமன்ற சான்றவாணங்கள்:– இல்லை

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.12.05 17:20:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.
கொடைக்கானல்.